**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 13.02.2026**
**OS. No. 27/2015 And 122/2015**
**வழக்கு சாட்சி DW.5–செங்கோட்டையன் , த/பெ.குழந்தைகவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) பிரதிவாதி இந்திராணிக்கும், கோவிந்தராஜிக்கும் எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் நான் 8ம் வகுப்பு படித்தபோது அவர்களுக்கு திருமணம் ஆனது. திருமணத்திற்கு நான் சென்றிருந்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. சொத்தை சண்முகம் வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்ததாக நான் சொல்லியுள்ளது எந்த தேதியில் என்றால் தேதி சரியாக நினைவில்லை. பாகம் பிரித்தபோது எனக்கு என்ன வயது என்றால் எப்போது பிரித்தார்கள் என்று தெரிந்தால் தான் வயது சொல்ல முடியும். பாகம் பிரித்து கொடுத்தபோது பிரதிவாதி இந்திராணிக்கு 1 ஏக்கர் பிரித்து கொடுக்கப்பட்டது. அந்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

2) மேற்கண்ட 1 ஏக்கர் நிலத்தின் சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும், குப்புசாமி நிலத்திற்கும் வடக்கு, பஞ்சாயத்து ரோட்டிற்கும் கிழக்கு, பெருமாள் நிலத்திற்கும் தெற்கு, கவுண்டர் நிலத்திற்கும் மேற்கு ஆகும். கோவிந்தராஜ் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்றால் 1992ம் வருடம் இறந்துவிட்டார். எங்கு இறந்தார் என்றால் மாரடைப்பால் இறந்ததாக கேள்விப்பட்டேன், எங்கு இறந்தார் என்று எனக்கு தெரியாது. கோவிந்தராஜ் மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்றால் நான் கேள்விப்பட்டவரை மாரடைப்பால் இறந்ததாக சொன்னார்கள். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட உயில் குறித்து தெரியுமா என்றால் தெரியும்.

3) நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தறி தொழில்செய்து வருகிறேன். எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். என் மனைவி மேச்சேரி பேரூராட்சி 8 வது வார்டு கவுன்சிலராக உள்ளார். சண்முகம் சொத்தை கோவிந்தராஜிக்கு பிரித்து கொடுத்துவிட்டு, மொத்த சொத்தையும் வெள்ளயைம்மாள் வகையறாவிற்கு எழுதி வைத்த விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் 4, 5 வருடத்திற்கு முன்பு இந்திராணி சொல்லி தெரியும். சண்முகம் இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். எந்த தேதி இறந்தார் என்றால் 2008ல் இறந்தார், தேதி, மாதம், நினைவில்லை.

4) உயிலானது மேச்சேரியில் தான் பதிவு செய்யவேண்டும் என்றும், ஓமலூரில் பதிவு செய்யக்கூடாது என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றும், உயில் ஆவணமானது எந்த பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்து கொள்ளலாம் என்றால் மேச்சேரி அருகிலுள்ளபோது ஏன் வேறு தாலுக்காவில் பதிவு செய்துள்ளார்கள் என்று தான் நான் அவ்வாறு சொல்லியுள்ளேன். சண்முகத்திற்கு மொத்தம் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் சுமார் 2 ஏக்கர் நிலம் உள்ளது. கோவிந்தராஜ் மாரடைப்பால் இறந்ததாக நான் சொல்லும் போது அவரது மகன் அருளுக்கு எவ்வளவு வயது என்றால் வயது தெரியவில்லை, குழந்தைகள் நடக்கும் வயது இருந்தது.

5) நான் தற்போது சீராமணியூர் காட்டுவளவில் குடியுள்ளேன். அதற்கு ஆதாரமாக அடையாள அட்டைகளும் உள்ளது. வாதிகள் மற்றும் பிரதிவாதிகளை எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் அவர்கள் எங்கள் வார்டில் தான் வசித்து வருகிறார்கள். தற்போது பிரதிவாதி இந்திராணிக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் அவருக்கு பிரித்து கொடுக்கப்பட்ட 1 ஏக்கர் நிலம் உள்ளது. சண்முகம் மகன் பெரியகவுண்டர் என்று எங்கள் ஊரில் ஒருவர் இருந்தாரா என்றால் இருந்தார். அவர் எவ்வாறு இறந்தார் என்றால் உடல் மற்றும் மனநிலை சரியில்லாமல் இறந்தார். அவருடன் நான் பேசியுள்ளேனா என்றால் பேசியதில்லை. வீட்டு வழியாக செல்லும் போது பார்த்துள்ளேன். பிரதிவாதி இந்திராணி தாக்கல் செய்த வழக்கிலோ இந்த வழக்கில் தாக்கல் செய்த எதிருரையிலோ சண்முகம் மகன் பெரியகவுண்டர் உடல் நிலை மற்றும் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்று எவ்வித வாசகமும் சொல்லவில்லை

என்றும், நான் தற்போது அவர் சொல்லாத சங்கதியை குறித்து புதியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்திராணி கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) என்னுடைய சொந்த ஊர் திமிரிகோட்டையா என்றால் இல்லை, சீராமணியூர் தான். நான் சொல்வது தவறு என்றும், என் சொந்த ஊர் திமிரிக்கோட்டை தான் என்றும், அதனால்தான் நான் அ டையாள அட்டை எதுவும் கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல, ஆதார் அட்டை என் கைபேசியில் உள்ளது, வேண்டும் என்றால் அதை சமர்பிக்க தயாராக உள்ளேன். சண்முகம் எவ்வாறு இறந்தார் என்றால் உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்து இறந்தார்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.